# உலர் உணவு நிவாரண நிறுத்தத்தைக் கண்டித்து யாழ் செயலகம் முன் மறியல் போராட்டம்

உலர் உணவு நிவாரணத்தை அரசு நிறுத்தியதை கண்டித்து நேற்று யாழ் செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் வயது வேறுபாடின்றி கலந்துகொண்டார்கள். தமிழர் நலன்காக்கும் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம் மறியல் போராட்டத்திற்கு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல பொது ஸ்தாபனங்களும் பொதுத்தொண்டர் நிறுவனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன. காலை 7 மணிக்கு ஆரம்பமான இம் மறியற் போராட்டத்தில் கலந்துகொள்ள தூரஇடங்களிலிருந்தும் பொதுமக்கள் நடந்து வந்ததை காணமுடிந்தது. யாழ் செயலக வாசலை தடைசெய்து பெண்களே நீண்ட நேரம் மறியல் செய்தனர் கொழுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது இவர்கள் உற்சாகத்துடன் வாசலை தடைசெய்து இருந்தனர். எனினும் வெயிலின் கொடுமையை கண்ணுற்ற ஆண்கள் தாமும் முன்வந்து பெண்களுக்கு — 04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 262 பிரசோற்பத்தி ஆவணி 01 ( 17 - 08 - 1991 ) சனி

# அமைச்சர் சிதம்பரம் மீது அ. தி. மு. க பலத்த தாக்குதல்

## ஆட்சேபித்து அமைச்சர் வீதி மறியல் போராட்டம்

இந்திய வர்த்தக இணையமைச்சர் ப. சிதம்பரமும் வேறு சில இந்திரா காங்கிரஸ் பிரமுகர்களும் நேற்று தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. க. தொண்டர்களால் தாக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை திருச்சி விமான நிலையத்தில் அமைச்சர் ப. சிதம்பரம் வந்திறங்கிய போது விமான நிலைய வாயிலில் அ.தி.மு.க தொண்டர்கள் கறுப்புக்கொடிகாட்டினர்.

இதைத் தொடர்ந்து அமைச்சரும் ஏனைய காங்கிரஸ் பிரமுகர்களும் கார்களில் விமான நிலையத்தை விட்டு வெளியேறினர்.

இதன்போது அமைச்சரின் வாகன அணியை இடையில் வழிமறித்த அ.தி.மு.க தொண்டர்கள் அமைச்சரின் காரை நோக்கி பலத்த கல் வீச்சை நடாத்தினர் கூழ் முட்டைகளும் அமைச்சரை நோக்கி பறந்தன.

இத்திடீர் தாக்குதலினால் —04ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சரை அ.தி.மு.கவினர் தாக்கவில்லை - ஜெயலலிதா

மத்திய அமைச்சர் ப சிதம்பரம் தாக்கப்பட்டமைக்கும் அ. தி. மு. க விற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என நேற்றிரவு முதலமைச்சர் ஜெயலலிதா திடீரென அறிவித்தார்.

அமைச்சர் திருச்சியில் தாக்கப்பட்டதாக முன்னர் வெளிவந்த செய்தி தவறானது எனவும் இப்படியான சம்பவங்களை தமிழக அரசு அனுமதிக்காது எனவும் கூறினார்.

## யாழ் நகரின் மேலாக வேவு விமானம் நோட்டம்

நேற்றுக்காலை யாழ் நகரைச் சுற்றியும் தீவகப் பகுதிகளைச் சுற்றியும் பல அடி உயரத்தில் வேவு விமானம் ஒன்று சில நிமிடங்கள் பறந்துதிரிந்தது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் இவ்விமானம் சுற்றிவட்டமிட்டு சென்று சிறிது நேரத்தில் ஊர்காவற்றுறை முகாமிலிருந்து படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். 15

## பேயாடிக்குளம் படையினர் வியாபாரிகள் மீது கெடுபிடி

வவுனியாவிலிருந்து வடபகுதிக்கு பொருள்களை எடுத்துவரும் தனியார் வியாபாரிகள் மீது படையினர் தொடர்ந்தும் கெடுபிடி விதித்து வருகின்றனராம்.

வியாபாரிகளாயினும் மற்றையவர்களாயினும் இரண்டு கிலோவிற்குட்பட்ட அரிசி, மா, சீனி, பருப்பு என்பனவற்றையும் பால்மா பைக்கற் ஒன்றிற்கு மேற்பட்டவற்றையும் கொண்டு செல்ல படையினர் அனுமதிப்பதில்லை எனவும் அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேயாடிக் கூழாங்குளம் படையினரே இக்கெடுபிடியில் அதிகம் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

## ஆனையிறவு முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

ஆனையிறவிலிருந்து கடந்த சில ,தினங்களாக பரந்தன், திருவையாறு, உருத்திரபுரம் குடிமனைகளை நோக்கி இராணுவத்தினர் கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

அப்பகுதிகளில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பல கால்நடைகளும் இறந்துள்ளதாகவும் அங்கிருந்துவந்தவர்கள் தெரிவித்தனர். 07

## ராணுவ முகாம்களிலிருந்து பரா வெளிச்சக்குண்டுகள்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு முழுவதும் பரா வெளிச்சக்குண்டுகள் வீசப்பட்டன.

இதேபோன்று காரைநகர், ஊர்காவற்றுறை இராணுவ முகாம்களிலிருந்தும் பரா வெளிச்சக்குண்டுகள் ஏவப்பட்டன. இவ்வேளையில் ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும் நடைபெற்றது. 15

## சீருடையினர் அட்டகாசம் ஒழிக்கப்படும் - தொண்டா

மலையக தோட்டப்பகுதியில் சீருடையினரின் அட்டகாசங்களுக்கு விரைவில் முடிவுகட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

மாத்தளைப்பகுதியில் இவ்வாறான சம்பவங்களை முளையிலேயே அகற்றி விட வேண்டும். இது குறித்து பாதுகாப்பு இணையமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார் 08

## சிப்பாய் பலி

மன்னார் கொக்குப்படையான் இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் இராணுவசிப்பாய் ஒருவர் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## முகாம் கட்டிடங்கள் திருத்தப்படுகிறது

விடுதலைப் புலிகளின் ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த ஆனையிறவு முகாம் கட்டிடங்கள் திருத்தியமைக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது

இதனிடையே நேற்று முன்தினம் முகாமில் தென்பகுதியூடாக புலிகள் ஊடுருவ முயன்றதாகவும் அப்போது இருதரப்பினரிடையேயும் மோதல் ஏற்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது

## கல்கத்தா விமான விபத்து பயணிகள் அனைவரும் பலி

நேற்று இந்தியாவில் இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்று நடுவானில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்,

கல்கத்தாவில் இருந்து இன்பால் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த போயிங்ரக விமானம் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த எல்லா 63 பயணிகளும் 6 விமானச் சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.

## வீரமரணம்

18.07-91இல்கட்டைக்காட்டுப் பகுதியில் நடைபெற்ற மோதலில் கோவிந்தம் (நடராசா சிதகுமார் முடங்கல் தோட்டம், அல்வாய் மேற்கு) வீரமரணமடைந்துள்ளார்.

18.07-91 இல் கட்டைக்காட்டுப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் சுபராஜ் (செல்லத்துரை தேவன், 6ஆம் வட்டாரம், வேலணை மேற்கு) வீரமரணமடைந்துள்ளார்.

30 07-91இல் புல்லாவெளியில் இடம் பெற்ற நேரடி மோதலில்லெப்டினன்ட்தாசன் —04ஆம் பக்கம் பார்க்க

## ரெலோ குழு மீது ஆரையம்பதியில் தாக்குதல்

மட்டக்களப்பு ஆரையம்பதியில் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு ரெலோ குழு உறுப்பினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மோட்டார் வாகனத்தில் வந்த ரெலோ குழுவினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதில்ஆரையம்பதி கோணேஷ் மகேந்திரன் ஆகிய ரெலோ உறுப்பினர் பலியாகினர். ரொபேட், ராஜு ஆகியோர் படுகாயமடைந்தனர்.

## தராசு கொலைச்சம்பவம் மூவர் கைதானதாக அறிவிப்பு

தமிழ் நாட்டில் நேற்று முன்தினம் தராசு பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னர் இச்சம்பவம் தொடர்பாக 15 பேர் கைதானதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதே வேளை சம்பவம் நடைபெற்ற போது நடவடிக்கை எடுக்காமைக்காக மூன்று பொலிஸார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

(நேற்றைய தொடர்ச்சி)

(மாமனிதர் விருதுபெற்ற எஸ். திருநாவுக்கரசு (அரசு) அவர்களை குழந்தை சண்முகலிங்கமும் கந்தையா ஸ்ரீகணேசனும் செவ்வி காணுகிறார்கள்

# மா மனிதருடன் ஒரு மணி நேரம்

கே: பேச்சுமொழியை தமிழ் நாடகக்காரர்களான பேராசியர் கணபதிப்பிள்ளை, சொக்கன், அ. ந கந்தசாமி ஆகியோர் வழியில் எழுதுவோர் மொழியியல் பண்புடன் காத்திரமாகக் கையாள இன்னொரு குழுவினர் மேடை வானொலி நாடகங்களில் மொழியையே நையாண்டி பண்ணும் தன்மையில் எழுதுகின்றனர்.

ப: எமது பேச்சுமொழியில்தாம் எமது இன்பம், துன்பம், பாசம், பரிவு, கோபம், குமுறல் முதலிய உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்கிறோம். இது ஒரு கௌரவமான பாவனை. நாடகத்துள் இதனை அமைக்கும்போது அதன் கனதி பேணப் படவேண்டும். சில இடைக்கால நாடகங்களில் வேலையாள், நகைச்சுவைப் பாத்திரங்கள் நையாண்டி பண்ணும் பாவனையில் பேச்சுநடையில் உயர்ப்பாத்திரங்கள் செந்தமிழிலும் பேசின. உண்மையில் வாழ்க்கையில் எல்லோரும் பாவிக்கும் பேச்சு மொழியில் நாடகங்கள் அமைப்பது சிறப்பானது சி. சண்முகம் எழுதி தான் தயாரித்த 'சரியா தப்பா' நாடகம் தொழிலாளர் போராட்டம் பற்றியது. இது நடைமுறைத் தமிழிலமைந்த ஒரு தராதர நடையில் எழுதப்பட்டது. இன்றைய நவீன நாடகப்படைப்புகள் சாதாரண மாந்தரது பேச்சு நடையில் எழுதப்பட்டவையே.

கே: தங்களுக்கு நாடக எழுத்துரு எழுதிய அனுபவங்கள் உண்மையா?

ப: மு. கனகராஜனுடன் இணைந்து 'எதிரொலி' எனும் நாடகம் எழுதினேன். ஆனால் அந்நாடகம் கால கட்டத்தில் சற்று பின் வந்திருக்க வேண்டியது. ஒரு விதவையின் பிரச்சினையை மையமாகக் கொண்ட நாடகம் அது. 30 வருடங்களுக்கு முன் மேடையேறியபோது 'நல்ல நாடகம்தான் ஆனாலும்...' என மக்கள் முணுமுணுத்தனர் பிரச்சினையை முகம் கொடுக்க மறுத்தனர்.

அத்தோடு A. V P. ஆசைத்தம்பியின் மூலக்கதையை யாழ்ப்பாண செந்தமிழ் நடையில் பற்குணம், சோமசுந்தரம் ஆகியோருடன் இணைந்து எழுதியதோடு சில அரங்க நாடகங்களுக்கும் எழுதியுள்ளேன்.

கே: தாசியஸ், சண்முகலிங்கம், மௌனகுரு, சிதம்பரநாதன் நாடகங்களுக்கும் பழைய வரலாற்று நாடக பாத்திரங்களுக்கும் ஒப்பனை செய்துள்ளீர்கள். ஒப்பனைத் துறையில் என்னென்ன வித்தியாசங்களைக் காண்கிறீர்கள்.

ப: நாடகங்களில் பாத்திர ஒப்பனை முக்கியமாகக் கருதப்படுகிறது வரலாற்று நாடகப்பாத்திரங்களின் ஒப்பனை ஏற்கனவே வரையறுக்கப்பட்ட ஒன்று. அதிக கற்பனை தேவை இல்லை. அரசரோ, அரசியோ, மந்திரியோ, முனிவரோ இப்படித்தான் ஒப்பனை செய்யப்பட வேண்டும் என ஒரு பாரம்பரியம் உண்டு ஆனால் இன்றைய யதார்த்த,வகை நாடகங்களின் எழுத்துருவை ஆராய்ந்து, நெறியாளருடன் விவாதித்து பாத்திரகுணாம்சத்துக்கு ஏற்ப ஒப்பனை செய்யப்பட வேண்டும். குறியீட்டுப்பாணியில் அமைந்த, கோடியுற்ற நாடகங்களில் பாத்திரங்களின் முரண்பட்ட குணாம்சங்களைப் பிரதிபலிக்கும் குறியீட்டு ஒப்பனை செய்யப்படுகிறது, புதியதொரு வீட்டில் வரும் 'மின்னல்', 'இடி' காட்சிகளைக் காட்சிப்படுத்தும் நடிகர்களுக்கு குறியீட்டு ஒப்பனை செய்யப்பட்டது. தாசீசியஸின் 'பொறுத்தது போதும் மௌனகுருவின் 'சம்சாரம்' 'நம்மைப்பிடித்த பிசாசுகள்' என்பவற்றுக்கு அவ்வகையில் ஒப்பனை அமைத்தேன்.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'கூடி விளையாடுபாப்பா' மௌன குருவின் 'தப்பி வந்த தாடி ஆடு' 'வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்' ஆகிய சிறுவர் நாடகங்களுக்கு பிள்ளைகளின் முகத்தை மறைக்காது மிருகங்களின் குணாம்சம் துலங்குமாறு ஒப்பனை செய்தேன். இப்போது சிதம்பரநாதனின் நெறியாள்கையில் உருவான 'மாற்றம்', 'உயிர்த்தமனிதர் கூத்து' என்பனவற்றில் குறியீட்டுத்தன்மையை துலாம்பரமாகக் காட்டும் முகமாக முகமூடி பயன்படுத்தப்படுகிறது முருகையனின் எழுத்தில் உருவான 'உயிர்த்த மனிதர் கூத்து' ஒரு 'அரசியல் நாடகம்' ஆகும்.

கே: அரசியல் நாடகம் எனும்போது தங்களது அரசியல் பங்களிப்பு பற்றி நினைவு வருகிறது. 1961 ஆம் ஆண்டு தமிழரது சத்தியாக்கிரக போராட்டத்தின்போது இராணுவ ஜீப்பைக் கண்டு மக்கள் ஓ னர். ஆனால் நாங்கள் 'தனியனாக நடுவீதியில் துப்பாக்கி முனைகள் மத்தியில் நெஞ்சை நிமிர்த்திக் கிடந்த வரலாறு உள்ளூர் 'சுதந்திரன்' முதல் இந்திய 'இந்து', சர்வதேச 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகைகள் வரை அறிந்த உண்மை ஆகும். இந்தத் துணிவு இன்றைய இளந்தலைமுறையிடம் நிறைந்து காணப்படுகிறது. அன்று எப்படித் தங்களால் இது முடிந்தது?

ப: ''வீட்டை சாப்பாட்டுக்கு வாறன்'' என்று சொல்லிவிட்டுப் போராட்டத்துக்கும் போனால் செய்யும் துணிவு வராது இது ஒவ்வொருவராலும் செய்யக் கூடியதே. வாழும் வரை மகிழ்வோடு இரசித்து வாழ வேண்டும். எடுத்துக் கொண்ட இலட்சியத்துக்குத் தியாகம் செய்ய வேண்டும் எனில் எக்கட்டத்திலும் செய்யும் மனப்பாங்கு இருந்தால் எதனையும் சாதிக்கலாம்

கே: தங்கள் அரசியல் சாதனைக்குப் பின்னணியில் இருந்த தங்கள் தமிழின உணர்வு தங்கள் கலையில் எவ்விதம் துலங்கியது?

ப: தமிழின உணர்வு வெளிப்படுத்தும் வகையில் அமைந்த நாடகங்களான 'வீரமைந்தன்', 'வீரத்தாய்', 'அன்னையின் ஆணை', 'தமிழன் கதை' ஆகியவற்றை இயக்கினேன். வீரமைந்தன் நாடகம் 1959 இல் மேடையேறியது இது 'காலை உதிக்கப் போகும் சூரியனுடன் தமிழ்ஈழம் மலரட்டும்'' என முத்தாய்ப்புடன் நிறைவடைகிறது. —04ஆம் பக்கம் பார்க்க

# மலையகத்தில் பலதமிழர்கள் கைது!

## ஆட்சேபித்து 1000தொழிலாளர் வேலை நிறுத்தம்

தோட்டத் தொழிலாளி ஒருவர் பொலிஸாரினால் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்த 1000 தொழிலாளர்கள் கடந்த நான்கு தினங்களாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

பொகவந்தலாவ வெம்பர தோட்டத்தைச் சேர்ந்த நடேசன் ராஜு (19) என்ற தொழிலாளியே கைது செய்யப்பட்டவராவார். இவர் தடுப்புக் காவலில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் சகல தொழிலாளிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேசிய அடையாள அட்டையின்றி பதுளை நகருக்குச் சென்ற 30 தோட்ட வாலிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. அத்துடன் பதுளை நகரில் உள்ள கடைகளிலும் ஹோட்டல்களிலும் பணிபுரியும் பல தமிழ் இளைஞர்கள் கைதுசெய்ய பட்டுள்ளதாக ஊவா வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

## தொழில் நுட்பக்கல்வி ஆசிரியர் கருத்தரங்கு

பாடசாலைகளில் மரவேலை, உலோக வேலை, நெசவு, வனைதல், வானொலி பேணல், மோட்டார்ப் பொறித்தொழில் கற்பிக்கும் ஆசிரியருக்கான கருத்தரங்கு 19,20, 21-08-91 திகதிகளில் காலை 8.30-4 30 வரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொத்தணிகள் உதயம்

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு சங்க சமாசம் ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவுகளையும் கொத்தணிகளாகப் பிரித்து தனது செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது.

முன்பு மாவட்ட ரீதியில செயற்படுத்தப்பட்டு வந்த செயற்திட்டங்களை பின்னர் பிராந்திய ரீதியில் விஸ்தரித்து இதனை மேலும் வலுவடையச் செய்யும் நோக்குடனே புதிய கொத்தணிகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு பிரிவிலும் மாற்று முகவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு சங்க சமாசத்தின் செயலர் தெரிவித்தார். (04)

## போர்க்கால கருத்தரங்கு

நேற்று இரவு யாழ் மாவட்டத்தில் போர்க்காலக் கருத்தரங்குகள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் பல பகுதிகளில் நடாத்தப்பட்டது.

**தீவகத்தில்:**

வேலணை, புங்குடுதீவு வல்லவன் சிறி சண்முகநாதன்வித்தியாலயத்திலும், வேலணை, புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவிலடியிலும்,

**வலிகாமத்தில்:**

நல்லூர், அரியாலை பூம்புகார் மாதிரிக் கிராமத்திலும், தெல்லிப்பளை கணேஸவரம் வதனா சவுண்ட் சந்தியிலும்,

**வடமராட்சியில்:**

கரவெட்டி நவின் டிக் சாண்டா சந்தையிலும், வடமராட்சி கிழக்கு அம்மன் பாடசாலையிலும்.

**தென்மராட்சியில்:**

சாவகச்சேரி சரசாலை மத்திய சனசமூக நிலையத்லும், சாவகச்சேரி நாவற்குழி மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றன,

## பார்ஸலினுள் தங்கக் கட்டிகள்!

கொழும்பிற்கு அன்பளிப்புப்பார்ஸலில் அனுப்பப்பட்ட கம்பியூட்டர் ஒன்றுக்குள் இருந்து 10 தங்கக்கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

துபாயிலிருந்து கொழும்பிலுள்ள ஒருவருக்கு இந்த அன்பளிப்புப் பார்ஸல் அனுப்பப் பட்டிருந்தது.

இந்தக் கடத்தலை முறியடித்த சுங்கப் பகுதியினர் இலங்கை முகவரியாளருக்கு 19 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளனர்.

## சந்திரசேகரம் நியமனம்

எஸ் சந்திரசேகரம் திருகோணமலை மாகாண கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவுத் திணைக்கள எண்பார்வைப் பகுதி உதவி ஆணையாளர் பதவியுடன் புதிய அதிபர் பதவியை ஜூலை மாதம் முதலாந் திகதியிலிருந்து இவர் மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட இப் புதிய கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இரண்டாவது கூட்டுறவுப் பயிற்சியை பதினேழு கூட்டுறவுப் பரிசோதகர்கள் தற்போது பெற்று வருகின்றனர். (37)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

விஞ்ஞானபீட இரண்டாவது அரையாண்டுப் பரீட்சைகள் 1990

1990ஆம் ஆண்டிற்குரிய இரண்டாவது அரையாண்டுப் பரீட்சை 14 - 10 - 91 இல் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 15 - 09 - 1991 இற்கு முன்பாக யாழ்பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பம் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களைப் பரீட்சைக் கிளைப் பிரதிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ 10 செ. மீ அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

08097

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

தலைசிறந்த எழுத்தாளர்களின் பழைய புதிய நாவல்களை பெற்றுக் கொள்ளவும், றபர் சீல்கள் செய்யவும் நாடுங்கள். பழைய புத்தகங்களும் வாங்கப்படும். T.V. பாலா புத்தகசாலை கே. கே.எஸ், வீதி, இணுவில். 08088

தேவை

ஜாம், சோஸ் போத்தல்கள் (Jam, Sauce Bottles) ரூபா 3/ இற்கு குறையாமல் கொள்வனவு செய்யப்படும். கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும் Taste Line Industries (pvt) Ltd. 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம் 08092

தேவை

ஞரக்கன் ஓட்டு தேவை. மிக்ஸைவற், யாழ்ப்பாணம். 08091

தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மிக்ஸைவற், யாழ்ப்பாணம். 08087

SALE

Rare Selections of Eng-lish Books in all Fields off the Shelves of family libraries on 15th to 17th August 1991. Suitable for educational Institutions/ Family library/ lecturers. Eric Ganesh (opticians) 566, Hospital Road, Jaffna. 08081

UNIVERSITY OF JAFFNA

Thileepan Research Fellowship for Biotechnology

Graduates/ Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. Monthly allowance of Rs. 2,500/- shall be paid

The duration for this fellowship shall be one year and could be extended by reapplyingfor the fellowship. The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

The closing date for applications will be on 30 09.1991

REGISTRAR,
University of Jaffna.
08098

Nallur Branch Library

கடத்தல் புள்ளியைக் கைது செய்ய முனைந்தவர்களுக்குத் தடுப்புக் காவல்!

# பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் நஷ்டஈடு கோரி

# விசேட பணியக பொலிஸார் வழக்குத் தாக்கல்!

பொலிசாரிடம் நஷ்டஈடு கோரிப் பொலிசாரே வழக்குத் தொடர்ந்துள்ளனர். சிவில் உடையில் சென்று ஓர் கடத்தல் புள்ளியைத் தாம் கைது செய்ய முனைந்தபோது தாம் கைது செய்யப்பட்டு, ஒரு வாரம் விளக்க மறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக விசேட செயற்பாட்டுப் பணியகப் பொலிசாரான இன்ஸ்பெக்டர் முனிதாஸ, சார்ஜண்ட் அன்ரனி, கான்ஸ்டபிள் களுபஹன ஆகிய மூவரும் கொழும்புப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் செனிவரத்ன, கொழும்பு வடக்குப் பொலிஸ் சுப்ரிண்டன்ட் சர்வானந்தன் உட்பட ஐந்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்குத் தொடர அனுமதி கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

முதலாவது மனுதாரரான பிரதம இன்ஸ்பெகடர் மூன்று இலட்சம் ரூபா நஷ்டஈடும், ஏனைய இருவரும் தலா ஒரு இலட்ச ரூபா நஷ்டஈடும் கோரியுள்ளனர்.

## லங்கா சிமெந்து ஊழியர்க்கு ஒருவருட இடைக்கால ஓய்வு

காங்கேசன் லங்காசிமெந்து நிறுவன ஊழியர்களுக்கு தொழில் ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய இடைக்கால ஓய்வுக்கான கடிதங்கள் நிறுவனத்தின் நிர்வாகிகளால் வழங்கப்பட உள்ளன.

இவ் இடைக்கால ஓய்வானது 1991 ஜுலை 15ஆம் திகதி தொடக்கம் 1992ஜுன் 15 ஆம் திகதி வரை அமுல் படுத்தப்பட உள்ளது

இக் காலப் பகுதியில் ஊழியர்களுக்கு சம்பளமாக அவர்களது சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு வழங்கப்படும் எனவும், தொழிற்சாலை ஆரம்பிக்கும் பட்சத்தில் ஊழியர்களுக்கு முன்னைய வேலைகளே வழங்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது. (27)

## கோட்டங்களுக்கு விஜயம்

22ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ் கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் தற்பொழுது பயிற்சி பெறும் கொத்தணி அதிபர்கள் ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்களையும் தரிசிக்க உள்ளார்கள் எனவும் இவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ் கல்வித் திணைக்களம் மூலம் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளும் கேட்கப்பட்டுள்ளனர்.

கோட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும், சிறப்பு முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றியும் அறிவதே அவர்களது நோக்கமாக இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. (15)

## 21 யாழ் வாசிகள் பொலிஸாரால் கைது

திருவனந்தபுரத்தில் இரு விடுதிகளில் தங்கியிருந்த 21 யாழ் வாசிகள் கைதானதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களிடம் போதிய பிரயாண ஆவணங்கள் இல்லாமையினாலேயே பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனராம். கைதானவர்களில் இருவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராணுவத் தொண்டர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப் பணிப்பு

இலங்கை இராணுவத் தொண்டர் படைப் பிரிவில் 20 வருடங்கள் சேவை புரிந்தோருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

அதற்கான அங்கீகாரம் மந்திரிசபையால் வழங்கப்பட்டுள்ளது.

தொண்டர் படையில் 20 வருடங்கள் பணிபுரிந்த அதிகாரிகளுக்கும், 22 வருடங்கள் பணிபுரிந்த ஏனைய தரங்களைச் சேர்ந்தோருக்கும் இதன்படி ஓய்வூதியம் கிடைக்கும். (02)

## ஆனையிறவு இணைப்புப்பாதை; எமக்கு விடுவிக்கப்பட்ட ஒரு சவால்!

கட்டைக்காட்டுக்கும், ஆனையிறவுக்கு மிடையே "ஆறுமைல் தூரமான எமது மண்ணை அபகரித்து, எதிரி விநியோகப் பாதையை அமைத்து சகாக்களுக்கு உணவும், தளபாடங்களும் விநியோகித்து வருகிறான்..இந்த நிகழ்வானது, தமிழ்மக்களாகிய நம் எல்லோருக்கும் விடுக்கப்பட்ட ஒரு சவாலாகும்.

இவ்வாறு, கல்வயல் பாடசாலையடியில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் கவிஞர் மூ. வே. யோ.வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்அவர் தொடர்ந்து பேசுகையில்:-

வீரமும், தன்மானமும் மீண்டும் நிலைநாட்டப் படவேண்டுமானால், எதிரியின் ஆனையிறவு இராணுவ முகாமை அழித்து ஒழிக்க வேண்டும். அது மட்டுமல்ல; எதிரியின் விநியோகப் பாதையான கட்டைக்காடு - ஆனையிறவுப் பாதையிலிருந்து எதிரியை விரட்டியடித்து அப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆளுமையை நிலைநாட்ட வேண்டும். இந்தப் புனிதப் போருக்காக நம்மை நாமே ஆயத்தப்படுத்த வேண்டும்... அதற்காக உங்கள் பங்களிப்பைச் செய்ய முன்வாருங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார்.

## சாரணிய இயக்க ஆலோசனைக் கூட்டம்

பாடசாலைகளில் சாரணிய இயக்கம் ஆரம்பித்தல் சம்பந்தமாக ஒரு ஆலோசனைக் கூட்டம் யாழ் கல்வித் திணைக்களத்தில் 21ஆம் திகதி மு ப. 10-00 மணிக்கு நடைபெற உள்ளது.

சாரணிய இயக்கத்தினை மீண்டும் துடிப்பாக இயங்க வைப்பது சம்பந்தமாக இக் கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளது.

## 3 கோடி ரூபா செலவில் பாடநூல் அச்சடிப்பு

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடம். பாடப்புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக விநியோகிப்பதற்கு கல்வி அமைச்சு 300 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அக்டோபர் மாதம் முதல் பாடநூல் விநியோகம் நடைபெறும். அரச அச்சக கூட்டுத்தாபனம் 49 வகையான 85 லட்சம் புத்தகங்களையும், அரச அச்சகம் 33 வகையான 75 லட்சம் புத்தகங்களையும் தனியார் அச்சகங்கள் 42 வகையான 188 இலட்சம் புத்தகங்களையும் அச்சிடவுள்ளன.

அடுத்தவருடம் முதல் 3 ஆம் வருட மாணவர்களுக்கென புதிய ஆங்கில பாடப் புத்தகம் ஒன்றும் அறிமுகம் செய்யப்படவுள்ளது. (02)

## ஆயுர்வேத இறுதிப் பரீட்சை 31 ஆம் திகதி கொழும்பில்

யாழ் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி மாணவர்களின் இறுதி ஆண்டுப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதி கொழும்பு ஆயுர்வேதக் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக ஆயுர்வேத ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இப் பரீட்சைக்கு யாழ் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தை கொழும்பிலுள்ள ஆயுர்வேத ஆணையாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என கல்லூரி உப அதிபர் அறிவித்துள்ளார். (13)

## டி. எம். எஸ். வருகிறார்

அமைச்சர் தொண்டமானின் 79ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பண்டாரவளையில் நடைபெறவுள்ள விழாவில் பிரபல தென் இந்தியப் பாடகர் டி. எம். சௌந்தரராஜன் குழுவினரும் கலந்து கொண்டு இசை விருந்து அளிக்கவுள்ளனர்.

இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில் தென்னிந்திய சினிமா நடிகர்கள் சார்லி, குமரிமுத்து, வீரப்பன், மயில்சாமி குழுவினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## அகப்பட்ட ராணுவ மேஜர் பிரபல கடத்தல்காரராம்!

80 இலட்சம் ரூபா தங்கக் கடத்தல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள கூட்டுப் படைத்தலைமையக ராணுவ மேஜர் உடகம பொல இதற்கு முன்னரும் பலதடவைகள் நாட்டுக்குள் பெருமளவு தங்கத்தைக் கடத்தி வந்திருக்கலாமென தற்பொழுது இரகஸியப் பொலிஸார் சந்தேகிக்கின்றனராம். இதனால் இவர் பிரபல கடத்தல்காரராக இருக்கலாமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனராம்.

இவர் பல்வேறு கடவுச்சீட்டுக்களின் மூலம் முன்னர் பல தடவை வெளிநாடுகளுக்குச் சென்றுவந்துள்ளமையும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தஇராணுவ அதிகாரிக்கு எதிராக விரைவில் சுங்கப் பகுதியால் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது (16)

## கத்தோலிக்க ஆட்சிப்பீடத் தேவைக்கு யாழ் மாவட்டத்தில் நிதிசேகரிப்பு

கத்தோலிக்க பரிசுத்த ஆட்சிப் பீடத்தில் நிதி நிலைமையைச் சமாளிப்பதற்குத் துணைபுரியும் முகமாக யாழ் மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் அக்டோபர் முதல் ஞாயிறு திருப்பலியில் சேகரிக்படும் பணம் அனுப்பப்படவுள்ளது.

ஏப்ரல் மாதம் வத்திக்கானில் உலகமெங்குமுள்ள ஆயர் பேரவைத் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோது பரிசுத்த ஆட்சிப் பீடத்தில் நிதி நெருக்கடி பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தளத் திருச்சபை ஆயர்கள் மூலமாக உலகின் பல்வேறு பாகங்களில் திருச்சபை மேற்கொள்ளும் பணிகளுக்கு இப் பணம் வழங்கப்படும். (16)

## கோரிக்கை

இலங்கை வங்கி யாழ் மாவட்டத்தில் நிறுத்தி வைத்துள்ள கடன் வசதி அளிக்கும் திட்டத்தை மீள ஆரம்பிக்கும்படி யாழ் செயலகம் வங்கித் தலைமையகத்தைக் கோரியுள்ளது. (02)

## கிணறுகளுக்கு குளோரின்

வட்டுக்கோட்டைப் பகுதிகளில் நீரினால் பரவும் நோய்களான வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் முதலானவை பரவாது தடுப்பதற்காக பொதுக்கிணறுகளில் ''குளோரின்'' போடப்பட்டு வருகிறது. (18)

## பற்ரறி எடுத்துச் சென்றால் உடமைகள் பறிமுதலாகுமாம்

வவுனியா தடைமுகாம் வழியாக வடபகுதிக்கு ஒருவர் ஐந்து சோப்கட்டிகளை எடுத்துவர அனுமதிக்கப்படும் என அங்கு ஒலிபரப்பி மூலம் அறிவிக்கப்பட்டது.

பற்ரறியை எடுத்துச் சென்றால் அவர் எடுத்துச் செல்லும் ஏனைய பொருட்களும் பறிமுதல் செய்யப்படுமெனவும், பிரதி திங்கட்கிழமை தோறும் மண்ணெண்ணெய் வடக்கேஎடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும் எனவும் வவுனியா தடைமுகாமில் ஒலிபரப்பி மூலம் அறிவிக்கப்பட்டது. (16)

## பல்கலைக்கழக பரீட்சைகள்

யாழ் பல்கலைக்கழக கலைப் பிரிவுப் பரீட்சைகள் செப்டெம்பர் 16 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

1ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருடங்களுக்கான வருடாந்தப் பரீட்சைகள் யாவும் 16 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## 123 வது இடத்தில் இந்தியா!

### அம்பலமாக்குகிறது ஐ. நா. அறிக்கை

இந்தியா நாளுக்கு நாள் பின்னோறிக்கொண்டு போகிறது என ஐ. நா. சபையின் அறிக்கை கூறுகிறது.

160 நாடுகளின் முன்னேற்றம் பற்றி உலக நாடுகள் சபை ஓர் அறிக்கை தயாரித்திருக்கிறது. அதில் முதலிடம் வகிப்பது ஜப்பான்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள சைரலின் என்ற நாடு கடைசி இடத்தில். அமெரிக்காவுக்கு 4 வது இடம்.

அந்தப்பட்டியலில் இந்தியா 123 வது இடத்தில் இருக்கிறது. இதில் என்ன ஆச்சரியம் என்றால் இலங்கைக்கு 75 வது இடம், மாலைதீவுக்கு 93 வது இடம், பாகிஸ்தானுக்கு 120 வது இடம்.

ஆசியாவில் 70 கோடி மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். அவர்களில் பாதிப்பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். (16)

## புனரமைப்பு

தெகிவளை மிருகக்காட்சிச் சாலை மூன்று கோடி ரூபா செலவில் மீண்டும் புனரமைக்கப்படவுள்ளது.

யானைகளின் சாகஸத்திடல் 4500 பேர் கண்டு களிக்கக் கூடிய வசதிகளைக் கொண்டதாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

கல்வித் தகவல் மையம், வாகனத் தரிப்பிடம் என்பவற்றை உள்ளடக்கியதாக மிருகக் காட்சிச்சாலை புனரமைக்கப்படவுள்ளது.

★ புங்குடுதீவு போர்க்கால கருத்தரங்கில் ஆஞ்சி அறைகூவல்

# திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாளில் மக்கள் புரட்சி வெடித்திட வேண்டும்

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஆனையிறவுத் தள முற்றுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எமது வீரர்கள் அந்த முகாமை அழிக்கும் பணியில் கடந்த மாதம் 10-ம் திகதி தொடங்கி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த தள அழிவின் முடிவை, வெற்றியை நிர்ணயிப்பது மக்களாகிய நீங்கள் தரும் ஆட்பலத்தில்தான் தங்கியிருக்கிறது. ஒரு காலத்தில் எமது மக்களையும், தேசத்தை விடுவிக்கும் போராளிகளையும் எதிரி தேடி அழித்துக்கொண்டிருந்தான். ஆனால் இன்று எமது மண்ணை ஆக்கிரமித்து அமைத்து நிற்கும் தளத்தை சிப்பாயை பாதுகாக்க முடியாத நிலையில் இருக்கிறான் ஆனையிறவு யுத்தத்தில்... எதிரிக்கு எந்த அளவு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது, இந்த விடுதலைப் போராட்டத்திற்கு, விடுதலைப் புலிகளுக்கு எந்தளவு வளர்ச்சியும் அனுபவமும் ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு புங்குடுதீவில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ஆஞ்சிநேயர் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்.

முகாமை ஒரு வருடத்திற்கு தொடர்ந்து முற்றுகையிட்டுச் சுற்றி நிற்போமானால் நாளாந்தம் எதிரி மேற்கொள்ளும் எறிகணைத் தாக்குதலிலும், சினைப்பர் தாக்குதலிலும் இரு வீரர்களை இழக்க வேண்டிய நிலை உண்டு. ஒரு வருடத்தில் போராளிகளால் எதிரிக்கு எந்தவொரு அழிவையும் எற்படுத்தாமல், எமக்கு எந்த ஒரு வெற்றியையும் பெறாமல் இழக்க வேண்டி வரும். இவ் யுத்தத்தில் எதிரியின் நிலைதங்களுக்கு வந்த பெரும் அழிவில் இருந்து தப்பி இருக்கின்றோம் என்பதே... எமது நிலை, ஆனையிறவுத் தளத்திலிருந்த ஆயுதங்களை எடுக்கவில்லை, அங்கே புலிக்கொடியை ஏற்றவில்லை என்ற சிறு ஏக்கமே.

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் தரையிறக்கப்பட்டவுடன் இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பாளரான தளபதி விமலரத்தினா பத்திரிகைக்கு ஒரு செய்தியை விட்டிருந்தார்.... இன்னும் 24 மணி நேரத்துள் ஆனையிறவு முற்றுகையை உடைத்து காயப்பட்டவர்களை மீட்டு விடுவார்கள் என அறிவித்தார். உக்கிரமாக நடந்த 1-ம் நாள், 2-ம் நாள், 3-ம் நாள் யுத்தத்தின் பின் பத்திரிகைக்கு ஒரு கருத்தை வெளியிட்டார்.... குவிக்கப்பட்ட இராணுவம்... மறைவிடங்களில் இருந்து தாக்கும் புலிகளை வெளியே இழுத்து அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என அறிவித்தார். இக்கூற்றை நோக்கும்போது படையினர் இராணுவ முகாமுக்குள் புக முடியாது என்ற நிலையை இராணுவத் தளபதிக்கு ஏற்படுத்தியுள்ளது.

அந்த அளவிற்கு இராணுவத்தினருக்கு உயிர் இழப்புக்களையும், ஆயுத தளபாட அழிவுகளையும் எமது வீரர் ஏற்படுத்தினார்கள்.... யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்ட 2000 இராணுவத் துருப்புக்களும் அடுத்த நாள் யுத்தத்தில் ஈடுபட மறுத்தார்கள். மீண்டும் நாலாயிரம் துருப்புக்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டன. அவர்களுக்கும்பாரிய சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் முன்னேற முடியாத நிலையில் 8000க்கு மேற்பட்ட துருப்புக்கள் இறக்கப்பட்டன

பெருமளவு இராணுவத்தினர் கனரக ஆயுதங்கள், பீரங்கிகள், மோட்டார்கள், விமானப்படை உதவியுடன் பரந்த வெளியில் முன்னேறியபோது, எமது வீரர்கள் சாதாரண ரக ஆயுதங்களுடன் நின்று நேருக்கு நேர் மோதி... 500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 500க்கு மேற்பட்டோர் அங்கவீனமாக்கப்பட்டு, 1000க்கு மேற்பட்டோர் காயப்படுத்தப்பட்டு, ஒரு பாட்டாளியன் இராணுவமும், ஆயுதத் தளபாடங்களும் அழிககப்பட்டன ... அழிக்கப்பட்ட நிலையில் ... 24 நாட்களின் பின் முகாமிற்குள் இராணுவம் புகுந்தது....

களத்தில் நிகழ்ந்த சம்பவங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள். முன்னேறி வந்த இராணுவத்தினரை எதிர்த்து யுத்தம் புரிந்த ஒரு பெண் போராளியின் இடது கண்ணில் ரவை பாய்ந்து இரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்த நிலையிலும் ஒரு கையால் கண்ணைப்பொத்திக்கொண்டு எதிரியை நோக்கித் துப்பாக்கியை இயக்கியவண்ணம் இருந்தார். காயப்பட்ட இவரை மீட்கச் சென்றவர்கள் தூக்கியபோது வர மறுத்தார் இப்படி எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன.

ஊருக்கு இரண்டு மூன்று போராளிகள் நின்றுதான் இந்தச் சரித்திரம் படைக்கப்படுகின்றது. ஊரெல்லாம்போராளியானால் வெற்றி என்பது நிச்சயமே.

எனவே வீட்டிற்கொருவர் அவசரம் ஆயுதம் ஏந்தவேண்டும். திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாள் வந்து கொண்டிருக்கின்றது. மூன்றாம் ஆண்டு நினைவின்போது திலீபன் கூறியவாறு கோட்டையிலே புலிக்கொடி ஏற்றப்பட்டு, திலீபன் கூற்று நிதர்சனம் ஆக்கப்பட்டது. இந்த நினைவு நாளிலே மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற திலீபனின் கூற்றை நிதர்சனமாக்கத் தயாராகுவோம் என்றார்.

## வெற்றி வேண்டி உண்ணாவிரதம்

போராளிகளுக்கு வெற்றி வேண்டியும், காயமடைந்த போராளிகளுக்குசுகம்வேண்டியும் பூநகரி முழங்காவில் ஐயனார் கோவிலில் ந நல்லையா என்பவர் கடந்த 33 நாள்களாக உண்ணா விரதம் இருந்து வருகிறார். தாம் தொடர்ந்து 45 நாள்களுக்கு இவ்வாறு இருக்கப்போவதாக அவர் குறிப்பிட்டார்.

### அமைச்சர்...

அமைச்சர் சிதம்பரத்தின் காரும் ஏனைய பிரமுகர்களின் கார்களும் சேதமடைந்தன அமைச்சர் காயங்களுக்குள்ளாகினர்.

அ. தி மு க தொண்டர்களை விரட்ட பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்ததில் 16 அ. தி. மு. க உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

தாக்குதல் சம்பவத்தை ஆட்சேபித்து அமைச்சர் சிதம்பரமும் இந்திராகாங்கிரஸ் தொண்டர்களும் வீதியின் குறுக்கே மறியல் செய்தனர். இதனால் போக்குவரத்து ஸ்தம்பிதமடையவே அதிகாரிகள் தலையிட்டு அமைச்சரை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றனர்.

இதனிடையே காங்கிரஸின் தமிழகப்பிரிவு தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் காங்கிரஸ் கட்சியை அடகு வைத்துவிட்டார் எனக் கூறும் சுவரெட்டிகள் இந்திரா காங்கிரஸின் ஒரு பிரிவினரால் சென்னையில் ஒட்டப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

காவிரி நீர் பிரச்சனையில் தமிழகத்தவரான மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தமிழகத்திற்கு ஆதரவாக நில்லாமையை எதிர்த்தது இவரது தமிழக விஜயங்களை தமது கட்சி எதிர்க்கும் என முதலமைச்சர் ஜெயலலிதா முன்னர் கூறியிருந்தமை தெரிந்ததே.

## ஒய்வூதியக் கொடுப்பனவு

ஒய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக இன்று காலை 9 00 மணி தொடக்கம் 10-00 மணி வரை இலங்கை வங்கியின் பருத்தித்துறை, நெல்லியடி, மானிப்பாய், சுன்னாகம், காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் (2வது கிளை), ஊர்காவற்றுறைக் கிளைகள் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## கேரதீவு படகுச்சேவை கட்டணம் குறைப்பு

கேரதீவு இறங்குதுறை படகுச்சேவை கட்டணம்யாவும் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளது. வழமையான கட்டணம் இனிமேல் அறவிடப்படும் எனவும் எரிபொருள் விலையேற்றத்தால் கூட்டப்பட்ட இக்கட்டணம் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளதாக இறங்குதுறைப்பொறுப்பாளர் திரு. சபேசன் அறிவித்துள்ளார்.

அத்துடன் சங்குப்பிட்டி வவுனியா பஸ்சேவைக்கான கட்டணமும் நேற்று முதல் 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. 31

## பிரெஞ் வைத்தியர் அதிகரிப்பு

மடு அகதிமுகாமில் போதியளவு மருத்துவ சிகிச்சையின்மையால், தோல் மற்றும் தொற்று நோய் வியாதிகள் வெகுவாகப் பரவி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நோய் நடவடிக்கையை கட்டுப்படுத்த பிரெஞ் வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எம். எஸ். எவ் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இத் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு கடந்த நான்குமாதம் வரையில் 12க்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. 1

## ராமாயண விரிவுரை

நல்லூர் கந்தசுவாமி மகோற்சவத்தை முன்னிட்டு மேற்கு வீதி பிள்ளையார் கோவிலில எதிர்வரும் திங்கள் முதல் சம்பூர்ண ராமாயணத் தொடர் விரிவுரை நடாத்த சைவ மகாசபை ஏற்பாடு செய்துள்ளது

### வீரமரணம்...

(அன்ரனி தாசன் தேவலிங்கம் மயிலிட்டி) வீரமரணமடைந்துள்ளார்.

### உலர்...

சிறிது ஓய்வு கொடுத்து போராட்டத்தினைதொடர்ந்ததை அவதானிக்க முடிந்தது.

காலை 9, 30 மணியளவில் இலங்கை விமானப் படையின் வேவு விமானம் ஒன்று யாழ் செயலகத்தை சுற்றி நோட்டம் விட்டுச் சென்றது. அவ் வேளையிலும் அச்சமின்றி போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

அரசாங்க அதிபர் நேரடியாக வந்து இப் போராட்டத்தை நீண்ட நேரம் அவதானித்து நின்றது சிறப்பம்சம் ஆகும். அவர் பலருடன் நிவாரண நிறுத்தம் தொடர்பாக பேசிக் கொண்டிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. இறுதியாக நண்பகல் ஒரு மணியளவில் தமிழர் நலன்காக்கும் தலைவர் சி. சிவமகராசாவினால் கையளிக்கப்பட்ட மகஜரை அரச அதிபர் க. மாணிக்கவாசகர் பெற்று பதில் உரையாற்றியதைத் தொடர்ந்து மறியல் போராட்டம் 1. 30 மணியளவில் முடிவடைந்தது

(02, 04, 06, 07, 08, 25, 26 27)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

1990 1-ம், 2-ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு பரீட்சைகள்

கலை / வர்த்தகம் முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன மாணவர்கள் கவனத்திற் கொள்ளவும்.

பரீட்சை

1-ம் ஆண்டு
கலை/வர்த்தகம் / முகாமைத்துவம்
19. 09. 91 – 28. 09. 91

2-ம் ஆண்டுபொது/சிறப்பு
கலை/வர்த்தகம் / முகாமைத்துவம்/பகுதிI முதுகலைமாணித் தகுதிகாண் தேர்வு
30. 09. 91—11. 10. 91

3-ம் ஆண்டுபொது/சிறப்பு
கலை/வர்த்தகம் / முகாமைத்துவம்/பகுதிII முதுகலைமாணித்தகுதிகாண் தேர்வு
12. 10. 91—25. 10. 91

4-ம் ஆண்டு சிறப்பு
கலை/வர்த்தகம் / முகாமைத்துவம்/பகுதிIII முதுகலைமாணித்தகுதிகாண் தேர்வு
26. 10. 91—31. 10. 91

இராமநாதன் நுண்கலைப் பிரிவு

1-ம் ஆண்டு
30. 09. 91—02. 10. 91

2-ம் ஆண்டு
03. 10. 91—05. 10. 91

3-ம் ஆண்டு
07. 10. 91—09. 10. 91

4-ம் ஆண்டு
04. 11. 91—08. 11. 91

பதிவாளர்
08100


## மா மனிதருடன் ...

கே: இன்று தாங்கள் ஈடுபட்டிருக்கும் கலை முயற்சிகள் எதிர்காலத் திட்டங்கள் பற்றி......

ப; முருகையனின் 'உயிர்த்த மனிதர் கூத்து' சிதம்பரநாதனின் நெறியாள்கையில் நாடக அரங்கக் கல்லூரித் தயாரிப்பாக மேடையிடப்படுகின்றது இது ஒரு கூட்டுத் தயாரிப்பாகும். இதன் தயாரிப்புக் குழுவில் இயங்குவதோடு ஒப்பனை, அரங்க விதானிப்பு, வேட உடுப்பு விதானிப்பு ஆகியவற்றையும் கவனித்து வருகிறேன்.

தொடர்ந்து விரைவில் மேடையேற உள்ள பாஞ்சாலி சபதம் நாடகத்தை நாடக அரங்கக் கல்லூரிக்காக நெறியாள்கை செய்ய உள்ளேன். பாரதியின் பாஞ்சாலி சபதத்தை மேடைக்கென எழுதியுள்ளவர் குழந்தை ம சண்முகலிங்கம் ஆவார்.

கே: வளரும் இளந் தலைமுறை நாடகக் கலைஞர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது......

ப: புதிய இளந் தலைமுறை பல கலைத் துறைகளைக் கற்க வேண்டும். பல கலைகளின் சங்கமமே நாடகக் கலை. உலக நாடக வரலாற்றை படித்து, பல்வேறு நாடகவகை, போக்குகள் பற்றி அறிய வேண்டும். பயிற்சிப் பட்டறைகளில் கலந்து தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இயல்பான கலைஞனை அது மேலும் ஒருபடி உயர்த்தும் 52 வயதில் சு. தாசீசியனின் கீழ் நாடக அரங்கக் கல்லூரியில் பயிற்சிகளையும், படிப்பையும் தொடர்ந்தேன். ''எனக்கு எல்லாம் தெரியும், நான் படிச்ச அளவுதான் நாடகம் என்றால் அது நாடகக் கலைக்கு ஷீணம்''. கலைவாணியின் புத்தகம் விரிந்தபடி எப்போதும் இருப்பது 'தொடர்ந்து படி' என்பதை வலியுறுத்தவே, எனக்குப் படிப்பித்த செல்லையா உபாத்தியாயர் கூறுவார்:

''படிச்சுமுடிச்சவன் அரை மனிசன்
படிச்சுக்கொண்டே செத்தவன் முழுமனிசன்''

இருமணி நேரமாக அரை நூற்றாண்டுகால நாடகக் கலையுலக வரலாற்றை அலசிய உணர்வோடு மாமனிதர் அரசுவிடமிருந்து விடைபெற்றோம். முற்றும்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 17.08·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.